FIRST INFORMATION REPORT

Under Section 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167205

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 05/2026 Date: நாள் 6/7/2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a), 7A, 12 r/w 7(a)

(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: U/S 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 4/7/26 Date to : நாள் வரை —

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை Prior to 17.40 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 6/7/26 Time : நேரம் 17.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol II 6/7/26 Time : நேரம் 17.30 hrs & 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East 60 kms

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Arakkonam Sub Registry Gandhi Road, Arakkonam, Ranipet

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Nandakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sivanandam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5/9/70 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Cell Inspector (g) Address : முகவரி Inspection Cell office, Vellore Range Tirupathur and Tiruvannamalai District Collectorate, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr. J. Rasu (33/26), Assistant, I/c Sub Registrar, Arakkonam Sub Registry, Ranipet

(2) Tr. S. Kumaran (51/26) S/o Sundara Pandian, No 4/675, Annai Teresa St, Kamaraj Nagar, Sidco, Ranipet

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — (Temporary staff - Private Individual)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

6/7/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 6/7/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 6/7/26
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை Inspector No. எண் 80
VEAC, Ramnad

Attachment in Column No. 12 of FIR in Ranipet V&AC Cr.No. 05/2026 u/s 7(a),7(A), 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 and u/s 106 BNSS

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 06.07.2026-ஆம் தேதி சுமார் 17.30 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, S.நந்தகுமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- நாள்:06.07.2026 அனுப்புநர் S.நந்தகுமார், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை மாவட்டம். அய்யா, பொருள்: இருதுறை திடீர் கூட்டு சோதனை – அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு. இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொது மக்களிடம் இருந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார் பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாகவும், பதிவு செய்யப்படும் சொத்துப் பத்திரங்களின் மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர்களுக்கு செய்து முடிக்க வேண்டிய வேலைகளுக்காக நேரடியாகவும், தற்காலிக பணியாளர் திரு.குமரன் என்பவர் மூலமாகவும் கையூட்டு பெறுவதாகவும், எனக்கு கடந்த 04.07.2026 ஆம் தேதி பகல் 14.00 மணிக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலை, நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய தங்களுக்கு சுமார் 15.00 மணிக்கு தகவல் தெரிவித்து, என்னுடைய தலைமையில், பகல் சுமார் 15.30 மணிக்கு இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, அரக்கோணம் சார்பதிவகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 17.00 மணிக்கு வந்து சேர்ந்து, அக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலகத்தை குழுவினருடன் கண்காணிக்கப்பட்டது. பின்னர், மாலை சுமார் 17.40 மணிக்கு, சார் பதிவகத்தின் உள்ளே சென்று பார்க்க சார்பதிவாளர் இருக்கை காலியாக இருந்தது, எனவே, அங்கிருந்த அலுவலர்களிடம் என்னையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு, துறை அடையாள அட்டையை காண்பித்து வந்த நோக்கம் குறித்து அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் இருந்த நபரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் நவீன்குமார் என்றும், தான் இளநிலை உதவியாளர் என்றும், சார் பதிவாளர் பொறுப்பில் இருக்கும் திரு.ராசு, உதவியாளர் அவர்கள்

களப்பணியாக கைனூர் சென்றிருப்பதாகவும், சிறிது நேரத்தில் வந்துவிடுவார் என்று சொன்னார். பின்னர், அவரிடம் சார் பதிவாளரை தொடர்பு கொண்டு உடனடியாக அலுவலகத்திற்கு வரச்சொல்லும்படி சொல்ல, அலுவலகத்தில் இருந்த அலுவலர் திரு.ரங்கன், Data Entry Operator என்பவர் அவருடைய கைபேசியில் இருந்து, சார் பதிவாளர் திரு.ராசு அவர்களை தொடர்பு கொண்டு, விவரங்களை சொல்லி உடனடியாக அலுவலகத்திற்கு வரும்படி தெரிவிக்க அவரும் வந்துவிடுவதாக சொன்னதாக சொன்னார். பின்னர், சோதனைக்கு வந்த அலுவலர்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு, எங்களிடம் எந்த பணமும் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், சார்பதிவக ஹாலில் இருந்த நான்கு பெண்களான (1) திருமதி.V.திவ்யா நெ.11/7, சானத்தியம்மன் கோயில் தெரு, சுவால்பேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் (2) திருமதி.D.நிவேதா, நெ.3/169, பஜனை கோயில் தெரு, ஆட்டுப்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் (3) திருமதி.S.சகுந்தலா நெ.79, ராஜபாளையம், கீழ்ப்பாக்கம் அஞ்சல், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் (4) செல்வி.சுமதி, நெ.40, நேரு நகர், சுவால்பேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோர்களை விசாரித்து, விவரம் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டு அவர்களை உதவி ஆய்வாளர் திருமதி.சௌபர்ணிகா அவர்கள் மூலம் மறைவிடத்தில் மாண்பு குறையாமல் சோதனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. பின்னர், அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் (1) திரு.K.நவீன் குமார் இளநிலை உதவியாளர், (2) திரு.A.S.அம்ஜெத் பாஷா Data Entry Operator, (3) திரு.V.ரங்கன் Data Entry Operator, (4) திரு.S.யோகேஸ்வரன், I.P. Camera Operator, (5) திரு.K.ராம்குமார், I.P. Camera Operator, நெமிலி சார் பதிவாளர் அலுவலகம், இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோரை திரேக சோதனை செய்து அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டு அவரவர் வைத்திருந்த பணம் அவரவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி ஹாலில் சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் இருந்த திரு.நவீன்குமார் - இளநிலை உதவியாளர், திரு.அம்ஜத் பாஷா -Data Entry Operator ஆகியோர் அமர்ந்திருந்த மேஜை இழுவறைகளை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர், ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பு சார் பதிவாளர் இருக்கை மேஜையில் இருந்த இரண்டு இழுவறைகளை சோதனை செய்ய, அங்கு ஆவணங்களும், பதிவேடுகளும் இருந்தன, பணம் ஏதும் இல்லை. பின்னர், அந்த இருக்கையின் வலது பக்கம் இருந்த மர ரேக்கினை சோதனை செய்ய, அங்கு பழைய ஆவணங்களும், பேப்பர்களும் சீராக அடுக்கி வைக்கப்படாமல் இருந்தன. அந்த பேப்பர்களையும், ஆவணங்களையும் சோதனை செய்ததில், அவற்றிற்கு இடையில் பணம் ஆங்காங்கே இருந்தன. அந்த

பணம் குறித்து, அங்கிருந்த அலுவலர்களை கேட்க, அவர்கள் யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் மொத்தம் ரூ.1,200/- இருந்தது. இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறையில் வலது பக்கம் இருந்த மர ரேக்கினை என்று சொல்வதற்கு பதில் இடதுபக்கம் என தவறுதலாக குறிக்கப்பட்டது. அந்த ஹாலின் வடக்கு திசையில் உள்ள இரண்டு அறைகளில், நுழைவாயிலுக்கு அருகில் உள்ள அறை, சோதனை செய்ய, அங்கு பணம் ஏதும் இல்லை. அதற்கு அடுத்துள்ள பதிவறையை யார் பயன்படுத்துகிறார்கள் என திரு.நவீன்குமார் அவர்களிடம் கேட்க, அவர் அங்கு தற்காலிகமாக பணிபுரியும் குமரன் என்பவரை காண்பித்து, இவர்தான் அந்த பதிவறையில் உள்ள பதிவேடுகளை பராமரித்து வருகிறார் என சொன்னார். நமக்கு கிடைத்த இரகசிய தகவலில் குமரன்தான் பதிவிற்காக வரும் பொது மக்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும், இடைத்தரகர்களிடமும் பணத்தை லஞ்சமாக கேட்டு, பெறுவது என்பதால் அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் குமரன் (51/2026), த/பெ சுந்தரபாண்டியன், எண்.4/675, அன்னை தெரசா தெரு, காமராஜர் நகர், சிப்காட், இராணிப்பேட்டை மாவட்டம் என்று சொன்னார். தான் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் அரக்கோணம் சார் பதிவகத்தில் வேலை செய்து வருவதாகவும், தினசரி கூலியாக தனக்கு ரூ.500/- முதல் ரூ.1,000/- வரை சார் பதிவாளர் கொடுப்பதாக சொன்னார். பின்னர், அவரை சோதனை செய்ய, அவருடைய பேன்ட் வலது புற பாக்கெட்டில் பணம் ரூ.1,700/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய தினசரி செலவிற்காக வைத்திருப்பது என்று சொன்னதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவரை தொடர் விசாரணை செய்துகொண்டே அங்கிருந்த ஆவணங்களை சோதனை செய்ய, அவர் தானாக முன் வந்து தன்னுடைய டேபிளின் மீதிருந்த ஆவணங்களுக்கு அடியில் வைத்திருந்த பணத்தையும், அருகில் இருந்த பழைய பதிவேடுகள் வைக்கும் மர ரேக்கில் இருந்த பதிவேடுகளுக்கிடையில் இருந்த பணத்தை எடுத்து கொடுத்தார். அதில் எவ்வளவு இருக்கிறது என கேட்க, அவர் பதிலேதும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். அந்த பணத்தை எண்ணிப் பார்க்க, அதில் ரூ.62,500/- மற்றும் ரூ.4,100/- ஆக மொத்தம் ரூ.66,600/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, அவரிடம் விசாரிக்க, அந்த பணம் பத்திரப்பதிவிற்காக இன்றைய தினம் வந்த பொது மக்களிடம் அலுவலக செலவிற்காக வாங்கிய பணம் என தெரிவித்ததால், அந்த பணம் ரூ.66,600/- ஆனது பொது மக்களிடம் வாங்கிய லஞ்சப்பணம் தான் என்பதால் கைப்பற்றப்பட்டது. பின்னர் காத்திருப்போர் அறையில் உட்கார்ந்திருந்த நபர்களை விசாரிக்க (1) திரு.தணிகை அரசு, நெ.927, படவேட்டம்மன் கோவில் தெரு, வளர்புரம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் (2) திரு.C.பேரானந்தன், நெ.952, படவேட்டம்மன் கோயில் தெரு, வளர்புரம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் (3)

திரு.K.கதிவரன், நெ.2, ரெட்டைமலை சீனவாசன் தெரு, அம்பேத்கார் நகர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் (4) திரு.M.ராஜேஷ், நெ.18, சபாநாயகர் சிவ சண்முகம் தெரு, அம்பேத்கார் நகர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் (5) திரு.A.சிவபிரகாசம், நெ.1026, முத்துமாரியம்மன் கோயில் தெரு, வளர்புரம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோரை திரேக சோதனை செய்து அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறையில் குறிக்கப்பட்டு அவரவர் வைத்திருந்த பணம் அவரவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர், அந்த காத்திருப்போர் அறையின் மேற்கு திசையில் போடப்பட்டிருந்த நான்கு பேர்கள் அமரக்கூடிய ஸ்டீல் பென்ச்சில் சுருட்டப்பட்ட நியூஸ் பேப்பர் இருந்தது. அந்த சுற்றப்பட்ட பேப்பரை குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்க, அவர்கள் யாரும் அதற்கு உரிமை கோரவில்லை. பின்னர், அங்கிருந்த அலுவலக ஊழியர்களை விசாரிக்க, அவர்களும் அதற்கு உரிமை கோரவில்லை. அந்த சுற்றப்பட்ட பேப்பரை எடுத்து பார்க்க, அதில் பணம் கத்தையாக இருந்தது. அதை எண்ணிப் பார்க்க, அதில் ரூ.1,15,000/- இருந்தது. அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், அந்த பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் 18.05 மணிக்கு ஒரு நபர் என்னிடம் வந்து தன்னுடைய பெயர் ராசு என்றும், தான் பொறுப்பு சார் பதிவாளர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் T.ராசு (33/2026), த/பெ ஜெகதீசன், உதவியாளர், இணை-2 திருவண்ணாமலை சார் பதிவகம், பொறுப்பு: சார் பதிவாளர், அரக்கோணம் சார் பதிவகம், இராணிப்பேட்டை மாவட்டம் என்றும், தான் கடந்த 01.04.2026 ஆம் தேதி முதல் இங்கு பொறுப்பு சார் பதிவாளராக இருந்து வருவதாகவும், இன்று மாலை சுமார் 16.45 மணிக்கு பத்திர பதிவு முடிந்த பிறகு களப்பணிக்காக கைனூர் சென்றதாகவும், திரு.ரங்கன் என்பவர்தான் தனக்கு தகவல் சொன்னதாகவும், அதனால் தான் உடனே வந்ததாகவும் சொன்னார். பின்னர், அவரிடம் மீண்டும் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை விவரம் தெரிவித்து, எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு இது வரை நடந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டது. பின்னர், அவருடைய இருக்கையின் வலது பக்கம் இருந்த ரேக்கில் இருந்த பணம் ரூ.1,200/- குறித்து கேட்க, அவர் அந்த பணம் தன்னுடையது இல்லை என்றும், தன்னுடைய இடத்தில் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சொன்னார். எனவே, அந்த உரிமை கோராத பணம் ரூ.1,200/- கைப்பற்றப்பட்டது. பின்னர், அவரிடம் அலுவலக பதிவறையில் திரு.குமரன் என்பவர் எடுத்து கொடுத்த பணம் ரூ.66,600/- மற்றும் காத்திருப்போர் அறையில் இருந்த உரிமை கோராத பணம் ரூ.1,15,000/- குறித்தும், அந்த தொகைகளை கைப்பற்றியது குறித்தும் தெரிவிக்க, அவர் தனது அலுவலக ஊழியரான நவீன் குமார் மற்றும் குமரன் அவர்களிடம் கேட்டு உறுதி செய்து கொண்டார். பின்னர், தான் யாரிடமும் பத்திரப்பதிற்காக பணம் வாங்குவதோ,

வாங்க சொல்லுவதோ கிடையாது என தெரிவித்தார். பின்னர், சார் பதிவாளர் ஹாலுக்கு அருகில் கண்ணாடி தடுப்புகளால் ஆன அறை, சார்பதிவாளர் அலுவலக கட்டித்தில் உள்ள மற்றொரு பதிவறை, அங்கு பணம் ஏதும் இல்லை. பின்னர், சார்பதிவாளர் அலுவலக முதல் தளத்தில் பழைய ஆவணங்கள் உள்ளது என்றும், சில அறைகள் காலியாக உள்ளது எனவும் பொறுப்பு சார் பதிவாளர் சொன்னார். அந்த அறைகளை சோதனை செய்ய, அந்த அறைகளில் இருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், திரு.ராசு, பொறுப்பு சார்பதிவாளர் அவர்களிடம் அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலக அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு, DATA ENTRY OPERATOR AND CAMERA OPERATOR வருகை பதிவேடு, ஆன் லைனில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அ-கணக்கு, ஆன் லைனில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட "D" கணக்கு, ஆன் லைனில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட H-கணக்கு, அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது, உரிமை கோராத பணம் ரூ.1,16,200/-, தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.66,600/- ஆக மொத்தம் ரூ.1,82,800/- கைப்பற்றப்பட்டது. மேலும், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள், பொது மக்களிடம் இருந்து திரு.குமரன் அவர்கள் மூலம் வசூல் செய்து வைத்திருந்த பணம் ரூ.66,600/- கைப்பற்றப்பட்டது பற்றியும், உரிமை கோராத பணம் ரூ.1,16,200/- குறித்தும் தனிநபரான திரு.குமரன் அரசு அலுவலக பதிவேடுகளை கையாள்வது பற்றியும் திரு.ராசு பொறுப்பு சார் பதிவாளர் அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 04.07.2026 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், தாங்களும் சார்பதிவாளர் பொறுப்பு திரு.ராசு, இளநிலை உதவியாளர் திரு.நவீன்குமார் ஆகியோர் கையொப்பம் செய்தோம். எனவே அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் பொதுமக்களிடம் நேரடியாகவும் தற்காலிக பணியாளர் திரு.குமரன் என்பவர் மூலமாகவும், இடைதரகர்கள் மூலமாகவும் தனது பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து லஞ்சமாக பணத்தை கேட்டு பெறும் திரு.ராசு, உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் மீதும், அவருக்கு லஞ்சம் வாங்க உதவியாக செயல்படும் திரு.குமரன் த/பெ சுந்தரபாண்டியன், எண்.4/675, அன்னை தெரசா தெரு, காமராஜர் நகர், சிப்காட், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் மீதும் ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட உரிமைகோராத, தக்க முகாந்திரம் கூறாத லஞ்ச பணம் ரூ.1,82,800/- ம் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை

திடீர் கூட்டு சோதனையின்போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களின் விசாரணைக்காக ஒப்புவிக்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய ஒம்/-xxxxxxx 06.07.26, Cell Inspector, O/o the ICO/VLR -9

Sir, Received the complaint on 06.07.2026 at 17.30 hrs and a case in Ranipet Vigilance and Anti-Corruption Cr.No. 5/2026 u/s 7(a), 7(A), 12 r/w 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and u/s 106 BNSS was registered on 06.07.2026 at 18.00 hrs. Sd/-xxxxx 6/7/26 Ins. of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Principal District and Sessions Judge/Special Judge, Ranipet and sent the copies to the officers concerned.

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.